22 DEC 2016
UNIVERSITY, SRI LANKA

# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

இரண்டாம் வருட/ முதலாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு 2014/2015

( நவம்பர் / டிசம்பர் 2016)

## TL S 2133 தமிழிற் பெண்கள் இலக்கியம்
## Women's Writing in Tamil

நேரம்: 03 மணித்தியாலங்கள்

முதலாம் பகுதியிலிருந்து இரு வினாக்களுக்கும் இரண்டாம் பகுதியிலிருந்து மூன்று வினாக்களுக்குமாக எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

கையெழுத்துத் தெளிவில்லாதவிடத்து புள்ளிகள் குறைக்கப்படும்.

---

### பகுதி – 1

1. அ) 'பெண்கள் இலக்கியம்' என்னும் எண்ணக்கருவை விளக்குக. (10 புள்ளிகள்)
   ஆ) தமிழில் முற்கூறிய எண்ணக்கரு உருவாகியமைக்கான காரணிகளை ஆராய்க. (10 புள்ளிகள்)

2. அ) தமிழ் இலக்கியப் பரப்பில் 'பெண்கள் இலக்கியப் பாரம்பரியம்' என ஒன்றை இனங்காணலாமா? (05 புள்ளிகள்)
   ஆ) உமது விடையை ஆதாரங்களுடன் நிறுவுக. (15 புள்ளிகள்)

3. அ) சங்க இலக்கியப் பெண்பாற் புலவர்கள் பற்றித் தமிழ் இலக்கிய வரலாறு முன்வைத்துள்ள கருத்துக்களைத் தொகுத்துக் கூறுக. (05 புள்ளிகள்)

   ஆ) சங்க இலக்கியத்தில் வரும் பெண் புலவர்கள் இருவரது பாடல்களை உதாரணமாகக் கொண்டு அவர்களது பாடுபொருளை விளக்குக. (15 புள்ளிகள்)

### பகுதி – 1I

4. பக்தி இலக்கிய மரபின் முக்கிய அம்சங்களைத் தெளிவுபடுத்தி ஆண்டாள் பாடல்கள் எவ்வாறு பெண்களின் காதலுணர்வுகளை வெளிப்படுத்தின என ஆராய்க. (20 புள்ளிகள்)

5. சமகாலத்து ஈழத்துத் தமிழ்க் கவிதைக்கு பெண் கவிஞர்களின் பங்களிப்பை யாரேனும் இருவரது கவிதைகளை அடிப்படையாகக் கொண்டு விளக்குக. (20 புள்ளிகள்)

6. தமிழில் பெண்கள் சஞ்சிகைகளின் தோற்றம் பற்றிக் கூறி இலங்கையில் அவற்றின் ஆரம்பம், தற்கால வளர்ச்சி குறித்துக் கருத்துரைக்குக. (20 புள்ளிகள்)

7. தமிழில் சமகாலப் பெண்கள் இலக்கியத்தில் அம்பையின் சிறுகதைகள் பெறும் முக்கியத்துவத்தினை விளக்குக. (20 புள்ளிகள்)

**************************************